# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றச்செயல்களைத் தடுத்தல்; அத்துடன் அவற்றிற்குத் தண்டனை வழங்குதல் சட்டம்

---

*[1991, மாச்சு மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1991 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

**1991 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றச்செயல் களைத் தடுத்தல்; அத்துடன் அவற்றிற்குத் தண்டனை வழங்குதல் சட்டம்.**

[1991, மாச்சு மாதம் 15 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 60/88

தூதாண்மை முகவர்கள் உட்பட, சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றச்செயல்களைத் தடுத்தல்; அத்துடன் அவற்றிற்குத் தண்டனை வழங்குதல்மீதான சமவாயத்திற்குப் பயன் கொடுப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்குமான ஒரு சட்டம்.

முன்னுரை

தூதாண்மை முகவர்கள் உட்பட, சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றச்செயல்களைத் தடுத்தல்; அத்துடன் அவற்றிற்குத் தண்டனை வழங்குதல் மீதான ஒரு சமவாயம் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து மூன்றும் ஆண்டு திசெம்பர் மாதம் பதினான்காம் நாளன்று நியூயோர்க்கில் ஒப்பமிடப்பட்டுள்ளதாதலாலும்;

அத்துடன் சொல்லப்பட்ட சமவாயத்தில் இணைந்து கொள்ள இலங்கை கருதுகின்றதாதலாலும்;

அத்துடன் சொல்லப்பட்ட சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு இலங்கையில் பயன் கொடுப்பதற்குச் சட்ட ஏற்பாடு செய்வது அவசியமாயிருக்கின்றதாதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சருவதேச ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றச்செயல்களைத் தடுத்தல்; அத்துடன் அவற்றிற்குத் தண்டனை வழங்குதல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், 1973 திசெம்பர் 14 ஆம் தேதியன்று நியூயோர்க்கில் ஒப்பமிடப்பட்ட தூதாண்மை முகவர்கள் உட்பட, சருவதேச ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றச்செயல்களைத் தடுத்தல்; அத்துடன் அவற்றிற்குத் தண்டனை வழங்குதல் மீதான (இதனகத்துப் பின்னர் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமவாயம் இலங்கை தொடர்பில் வலுவுக்கு வர வேண்டுமென அத்தாட்சிப்படுத்தும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சமவாய நாடுகளை அமைச்சர் அத்தாட்சிப்படுத்தல்.

2. காலத்திற்குக் காலம் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சமவாயத்திற்கான திறத்தவ நாடுகளை அமைச்சர் அத்தாட்சிப்படுத்தலாம், எந்தநாடு தொடர்பில் இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கட்டளையொன்று வலுவுடையதாக இருக்கின்றதோ அந்த நாடு; இதனகத்துப் பின்னர் "ஒரு சமவாய நாடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

2—ஏ 007593—1,175 (90/01)

சருவதேச ரீதியாகப் பாதுகாக்கப் பட்ட ஆட்களுக் கெதிரான தவறுகள்.

3. (1) சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் ஆளை இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி கொலை செய்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான குற்றப் பகர்வின்மீதான விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அவர் மரணத்தின் மூலம் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

(2) சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் ஆளை இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி ஆட்கடத்தும் அல்லது ஆட்கவரும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கும் அத்துடன் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் ஆளை அல்லது அவருடைய சுதந்திரத்தை இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி தாக்கும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றப் பகர்வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொரு வகையிலான மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(4) சருவதேசரீதியாகப் பாதுகாப்பட்ட ஓர் ஆளை அல்லது அவருடைய சுதந்திரத்தை ஆபத்திற்குட்படுத்தக்கூடியவகையில் அத்தகைய ஆளின் உத்தியோக பூர்வ வளவுகளின்மீது, பிரத்தியேக வதிவிடத்தின் மீது அல்லது போக்குவரத்து சாதனத்தின் மீது இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி மூர்க்கத்தாக்குதலை மேற்கொள்ளும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் அல்லது (3) ஆம் உட்பிரிவில் அல்லது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் தவறை இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி

(அ) புரிவதாகப் பயமுறுத்தும் அல்லது புரிவதற்கு சதி செய்யும்;

(ஆ) புரிவதற்கு எத்தனிக்கும்; அல்லது

(இ) புரிவதற்கு உடந்தையாயிருக்கும்;

ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றப்பகர்வின்

மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், புரிவதாகப் பயமுறுத்தியதற்காக, புரிவதற்கு சதிசெய்ததற்காக, புரிவதற்கு எத்தனித்ததற்காக அல்லது புரிவதில் உடந்தையாயிருந்ததற்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தவறை புரிந்திருந்தால் அவர் எந்தத் தண்டனைக்கு ஆளாகியிருப்பாரோ அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவில், "உடந்தை" என்பது தண்டனைச் சட்டக்கோவையின் 100 அத்துடன் 101 ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே கருத்தையே கொண்டிருக்கும்.

சான்று.

4. அதனகத்துப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் ஆள் என்ற பயன்பட வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கைப்பட்ட ஒரு சான்றிதழ், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கான ஏதேனும் குற்ற வழக்கில் மேலதிக எண்பிப்பு இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான சான்றாதல் வேண்டும் என்பதுடன் அதனகத்துக் கூறப்பட்டுள்ள கருமங்களின் முதற்றோற்றவளவிலான சான்றாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளை விசாரிப்பதற்கான மேல் நீதி மன்றத்தின் நியாயாதிக்கம்.

5. (1) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறை, விசாரித்து சட்டத்தின் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் விளங்கி, விசாரித்து தீர்மானிக்க இலங்கையில் மேல்நீதிமன்றத்திற்கு இத்தால் நியாயாதிக்கம் உரித்தாக்கப்படுகின்றது.

(2) ஒராம் உட்பிரிவினால் இலங்கையின் மேல்நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள நியாயாதிக்கம் கொழும்பில் அமரும் மேல்நீதிமன்றத்தால் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்காக கைது செய்யப்படும் குறிப்பிட்ட சில ஆட்களுக்குள்ள உரிமைகள்.

6. இச்சட்டத்தின் கீழான ஒரு தவறுக்காக இலங்கைப் பிரசையல்லாத ஓர் ஆள் கைதுசெய்யப்படுமிடத்து அவ்வாள்—

(அ) தம் நாட்டினத்தவராயிருக்கும் அல்லது வேறுவகையாக அவருடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரித்துடையதாயிருக்கும் அல்லது நாடற்ற ஆளாயிருப்பின், அவருடைய வேண்டுகோளின் பேரில் அவருடைய உரிமைகளைப் பாதுகாக்க விரும்பும், நாட்டின் மிக அருகிலுள்ள தோதான பிரதிநிதியுடன் தாமதமின்றித் தொடர்புகொள்ளுவதற்கும்; அத்துடன்,

(ஆ) அந்நாட்டின் பிரதிநிதி ஒருவரால் பார்வையிடப்படுவதற்கும், உரித்துடையவராதல் வேண்டும்.

1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்தைத் திருத்துதல்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டம் அச்சட்டத்திற்கான அட்டவணையில், அதனகத்துள்ள பாகம் ஆ என்பதனை நேர்முந்தி பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (38) (அ) 1991 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றச்செயல்களைத் தடுத்தல்; அத்துடன் தண்டனை வழங்குதல் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வரும் சருவதேச

ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் ஆளை அல்லது அவருடைய சுதந்திரத்தை ஆபத்திற்குள்ளாக்கக்கூடிய வகையில் அத்தகைய ஆளினது உத்தியோகபூர்வமான வளவுகளின், பிரத்தியேக வதிவிடத்தின் அல்லது போக்குவரத்துச் சாதனத்தின் மீது மூர்க்கமான ஒரு தாக்குதல்:"

ஏலவேயுள்ள மீளவொப் படைப் பதற்கான ஒழுங்கு கள் அட்ட வணையிலுள்ள தவறு களுக்கும் ஏற்பாடு செய்வ தாகக் கரு தப்படல்.

8. இலங்கை அரசாங்கத்துக்கும் ஒரு சமவாய நாட்டுக்கும் இடையே மீளவொப்படைப்பதற்கான ஒழுங்கு ஒன்று வலுவிலிருக்கின்றவிடத்து அத்தகைய ஒழுங்கு 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப் படைப்பதற்கான சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தவறுகள் தொடர்பிலான மீளவொப் படைக்கும் ஏற்பாட்டையும் உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டும்.

அட்டவணை யிலுள்ள தவறுகள் தொடர்பில் அமைச்ச ரானவர் சமவா யத்தை, இலங்கைக் கும் சம வாய நாட் டுக்கும் இடை யிலான மீள வொப்படைக் கும் ஒழுங்காகக் கருதலாம்.

9. இலங்கை அரசாங்கத்திற்கும் ஒரு சமவாய நாட்டுக்கும் இடையில் மீளவொப்படைப்பதற்கான ஒழுங்கு வலுவில் இல்லாதிருக்கின்றவிடத்து அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், சமவாயத்தை, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள தவறுகள் தொடர்பில் மீளவொப்படைப்பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில், இலங்கை அரசாங்கத்திற்கும் அத்தகைய சமவாய நாட்டிற்கும் இடையிலான மீளவொப்படைப்பதற்கான ஒழுங்காகக் கருதலாம்.

பொருள் கோடல்

10. இச்சட்டத்தில்—

"சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆள்" என்பது:—

(1) அத்தகைய ஆள் அரசின் தலைவராயினுஞ்சரி, அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி ஒரு வெளிநாட்டில்

இருக்கும்போது சம்பந்தப்பட்ட நாட்டின் அரசியலமைப்பின் கீழ் ஒரு நாட்டுத் தலைவரின் பணிகளைப் புரியும் ஓர் பரிபாலன குழாத்தின் எவரேனும் உறுப்பினர் உட்பட, ஒரு நாட்டின் தலைவர், ஓர் அரசுத் தலைவர் அல்லது வெளிநாட்டு அலுவல்களுக்கான ஓர் அமைச்சர் எனவும் அவர்களுடன் சேர்ந்துவரும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனவும்;

(2) ஆளின் மேல், அவருடைய உத்தியோகபூர்வ வளவுகளின் மேல், அவருடைய பிரத்தியேக வதிவிடத்தின் மேல் அல்லது அவருடைய போக்குவரத்துச் சாதனத்தின் மேல் குற்றமொன்று இழைக்கப்பட்டவரும், இழைக்கப்பட்ட நேரத்திலும், இழைக்கப்பட்ட இடத்திலும் அவ்வாளின் மேலான, அவருடைய சுதந்திரத்தின் மேலான அல்லது அவருடைய கௌரவத்தின் மேலான ஏதேனும் தாக்குதலிலிருந்து சருவதேசச் சட்டத்தைப் பின்பற்றி விசேட பாதுகாப்புப் பெறுவதற்கு உரித்துடைய, ஒரு நாட்டின் எவரேனும் பிரதிநிதி அல்லது அலுவலர் அல்லது அரசுகளுக்கிடைப்பட்ட தன்மைத்தான சருவதேச ஒழுங்கமைப்பு ஒன்றின் அலுவலாளர் அல்லது வேறு முகவர்; அத்துடன் அவர்களின் குடும்பத்தின் பாகமாக அமையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனவும்.

பொருளாகும்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

## அட்டவணை

[பிரிவுகள் 8, 9]

1. சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆளின்மேல் அல்லது அவருடைய சுதந்திரத்தின் மேல் மேற்கொள்ளப்படும் கொலை, ஆட்கடத்தல் அல்லது வேறு தாக்குதல்;

2. சருவதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் ஆளை அல்லது அவருடைய சுதந்திரத்தை ஆபத்திற்குட்படுத்தும் வகையில் அவருடைய உத்தியோகபூர்வ வளவுகள், பிரத்தியேக வதிவிடம் அல்லது போக்குவரத்துச் சாதனம் என்பன மீதிலான ஒரு மூர்க்கமான தாக்குதல்;

3. (அ) விடயங்கள் (1) அத்துடன் (2) இல் குறிப்பிடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் தாக்குதலைச் செய்வதற்கான அச்சுறுத்தல் அல்லது சதி;

(ஆ) விடயங்கள் (1) அத்துடன் (2) இல் குறிப்பிடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் தாக்குதலைச் செய்வதற்கான எத்தனம்;

(இ) விடயங்கள் (1) அத்துடன் (2) இல் குறிப்பிடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் தாக்குதலைச் செய்வதில் உடந்தை.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.